# இணை பொது அறிவிப்பு

யூனிகோ ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் **("நிறுவனம்")** க்கு வழங்கப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி எண் S3568/27.01.048/2025-26 தேதியிட்டது 05.08.2025, **("RBI அனுமதியின்")** படி, இந்த அறிவிப்பு முதன்மை இயக்கம் - வங்கி சாரா நிதி நிறுவனம் - வீட்டு வசதி நிதி நிறுவனம் **(ரிசர்வ் வங்கி)** வழிமுறைகள், 2021 **("முதன்மை இயக்கம்")** இன் அத்தியாயம் **VIII** (கையகப்படுத்தல்/கட்டுப்பாட்டு பரிமாற்றம்) இன்பத்தி 45 இன் கீழ் முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகளுக்காக நிறுவனம், முதலீட்டாளர்கள், விற்பனையாளர் மற்றும் வாங்குபவர்கள்-ஆல் கூட்டாக வெளியிடப்படுகிறது. இந்த அறிவிப்பு கீழ்கண்ட முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகளுக்காக வெளியிடப்படுகிறது (I) நிறுவனத்தின பங்கு வெளியீடு (a) கிராண்ட்அனிகட் ஏஞ்சல் ஃபண்ட் **("GAAF")**; (b) கிராண்ட் அனிக்கட் ஃபண்ட் 3 ("GAF 3") மற்றும் (c) UC இம்பவர் ஃபண்ட் I, (இனி **"முதலீட்டாளர்கள்"** என குறிப்பிடப்படுவார்கள்) மற்றும் (ii) செல்வி. வர்ஷினி வாசுதேவன் பதங்கி **("விற்பனையாளர்")** இடமிருந்து (a) GAAF மற்றும் GAF 3 இன் துணை நிறுவனங்கள் (GAAF, GAF 3 மற்றும் GAAF, GAF 3 இன் துணை நிறுவனங்கள் இனி "அனிக்கட் முதலீட்டாளர்களின் தொகுப்பு" என குறிப்பிடப்படுவார்கள்) மற்றும் (b) UC இம்பவர்ஃபண்ட் I (இனி **"வாங்குபவர்கள்"** என குறிப்பிடப்படுவார்கள்)

1. **நிறுவனத்தின் பின்னணி:** இந்த நிறுவனம் இந்தியாவில் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும், நிறுவன அடையாள எண் U64990TN2023PTC158736 மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 8வது மாடி, தி ஓவல், எண்.10 & 12, வெங்கட நாராயணா சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017, தமிழ்நாடு, இந்தியா. இந்த நிறுவனத்திற்கு அக்டோபர் 16, 2023 அன்று இந்திய ரிசர்வ் வங்கியால் DOR - 00187 என்ற வீட்டு வசதி நிதி நிறுவன உரிமம் வழங்கப்பட்டது. 31.03.2025 நிலவரப்படி, நிறுவனம் 7 மாநிலங்களில் 85 கிளைகளைக் கொண்டுள்ளது மற்றும் அதன் AUM ரூ.392.58 கோடியாக வளர்ந்துள்ளது.
2. **முதலீட்டாளர்கள் மற்றும் வாங்குபவர்கள் பற்றிய விவரங்கள்:** GAAF என்பது வகை I வென்சர் கேப்பிட்டல் ஃபண்ட் - Angel Fund ஆகும், இதன் பதிவு எண். IN/AIF1/19-20/0738. GAF 3 என்பது வகை I AIF வென்சர கேப்பிட்டல் ஃபண்ட் ஆகும், இதன் பதிவு எண் IN/AIF1/22-23/1048. மேலே குறிப்பிட்டவற்றோடு சேர்த்து, GAAF மற்றும் GAF 3 இன் சில துணை நிறுவனங்கள், நிறுவனத்தின் பத்திரங்களை வாங்குவார்கள், மற்றும் ஒருமித்து செயல்படுபவர்களாக கருதப்படுவார்கள். UC இம்பவர் ஃபண்ட் I என்பது வகை II AIF ஆகும், இதன் பதிவு எண் IN/AIF2/21-22/1006, இது அனிக்கட் முதலீட்டாளர்களின் தொகுப்பு இல் இருந்து சுதந்திரமாக செயல்படுகிறது.
3. **முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகளுக்கான காரணம்:** நிறுவனம் மற்றும் முதலீட்டாளர்களால் பங்குசந்தா ஒப்பந்தத்தை செயல்படுத்த செய்ததன்படி, மற்றும் விற்பனையாளர் மற்றும் வாங்குபவர்களால் பங்கு கொள்முதல் ஒப்பந்தத்தை செயல்படுத்த செய்ததன் படி, அனிகட் முதலீட்டாளர்களின் தொகுப்பு மற்றும் UC இம்பவர் ஃபண்ட் I ஆகியவை நிறுவனத்தின் பங்குகளை வாங்கவிரும்புகிறார்கள் ("முன் மொழியப்பட்ட பரிவர்த்தனைகள்"). இந்த முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகள் நடைபெற்றால், (a) நிறுவனத்தில் தோராயமாக 24% மற்றும் அதற்கு மேல் (முழுமையாக நீர்த்த அடிப்படையில்) பங்குதாரர் மாற்றம் மற்றும் (b) அதன் விளைவாக இயக்குநர்கள் குழுவில் மாற்றம் ஏற்படும். நிறுவனம் ஆனது பொது நிறுவன நோக்கங்களுக்காக நிதி திரட்டுதலுக்காக முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகளை மேற்கொள்ள விரும்புகிறது, இதில் வணிக விரிவாக்கம், செயல்பாட்டு மூலதனத் தேவைகள், மூலதனச்செலவு, மூலோபாய முதலீடுகள் மற்றும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி நிலையை மேம்படுத்துவது உட்பட பல விஷயங்கள் அடங்கும். பத்திரங்களை வெளியிடுவது நிறுவனத்தின் நீண்டகால தொலைநோக்கு மற்றும் வளர்ச்சி உத்தியுடன் ஒத்துப்போகிறது, மேலும் மூலதனத்தை உட்செலுத்துவது நிறுவனம் அதன் செயல்பாட்டுதிறன்களை மேம்படுத்த உதவும்.
4. **ரிசர்வ் வங்கி ஒப்புதல்:** முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகளுக்கு **("விண்ணப்பம்")** முன்மொழியப்பட்ட ரிசர்வ் வங்கியின் முன் ஒப்புதலைக்கோரி, முதன்மை வழிமுறைகளின் பத்தி 45 இன்படி, நிறுவனம் 19.03.2025 தேதியிட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிறுவனம் அதன் விண்ணப்பத்தில் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது - அவை சரியான நேரத்தில் நிறைவேற்றப்படும். முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகள் நிறுவனம், அனிகட் முதலீட்டாளர்கள் தொகுப்பு மற்றும் யூசி இம்பவர் ஃபண்ட் I ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பொது அறிவிப்பு, விண்ணப்பம் மற்றும் முன்மொழியப்பட்ட பங்குதாரர் மாற்றம் மற்றும் முன்மொழியப்பட்ட பரிவர்த்தனைகளின்படி நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு / நிர்வாகத்திற்கு முன்மொழியப்பட்ட மாற்றம் தொடர்பான அறிவிப்பு / அறிவிப்பை பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் ஒப்புதலின்படி, இந்த பொது அறிவிப்பு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்கு நிறுவனம், விற்பனையாளர், அனிகட் முதலீட்டாளர்கள் தொகுப்பு மற்றும யூசி இம்பவர் ஃபண்ட் I ஆகியவற்றால் கூட்டாக வெளியிடப்படுகிறது.

ஏதேனும் சந்தேகங்களுக்கு தயவு செய்து கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

A. நிறுவனத்தின் 8வது மாடி, தி ஓவல், எண். 10 & 12, வெங்கட நாராயணா சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017, தமிழ்நாடு, இந்தியா என்ற பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் உள்ள திரு. பாபு வெள்ளிங்கிரி, மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிக்கு கடிதம் அனுப்புவது மற்றும்

B. நிறுவனத்திற்கு babuvellingiri@unicohfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவது.

இந்த பொது அறிவிப்பின் நகல் நிறுவனத்தின் வலைத்தளமான www.unicohousingfinance.com இல் கிடைக்கிறது.

**யூனிகோ ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்**
**ஒப்பம்/-**
**பெயர்: பாபு வெள்ளிங்கிரி**
**பதவி: மேலாண்மை இயக்குநர் தலைமை நிர்வாக அதிகாரி**

**விற்பனையாளருக்கு**
**ஒப்பம்/-**
**பெயர்: பாபு வெள்ளிங்கிரி**

**யூசி இம்பவர் ஃபண்ட் I-க்காக**
**ஒப்பம்/-**
**பெயர்: விகாஸ் சர்தா**
**பதவி: இயக்க பங்குதாரர்**

**அனிக்கட் முதலீட்டாளர்களின் தொகுப்பிற்கு**
**ஒப்பம்/-**
**பெயர்: வெங்கடேஷ் பார்த்தசாரதி**
**பதவி: தலைமை இணக்க அதிகாரி**
**அனிக்கட் கேப்பிட்டல் LLP**

**தேதி: 07.08.2025**
**இடம்: சென்னை.**